சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் :05.12.2024

ம.சா.1 – மூகாம்பிகைW/o வேலாயுதம்

MCOP No. 26/2022 :

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :

விபத்து தொடர்பாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து தொடர்பாக முதல் தகவல் காவல்நிலையத்தில் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த அன்று எனக்கு காவல்நிலையத்தில் இருந்து தகவல் வந்தது. முதல் தகவல்அறிக்கையானது அமுதாவின் தகவலின் பேரில் பதிவு செய்யப்பட்டது என்றும், அமுதா இறந்த செல்வமணியின் சகோதரி என்றால் சரிதான். அமுதா திருச்சியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அமுதா என்னுடைய அத்தை என்றால் சரிதான். அவருக்கு எனக்கும் உறவு சுமூகமாக உள்ளதா என்றால் விஷேசங்களுக்கு கலந்து கொள்வோம். அமுதாவுக்கும், எனக்கும் எந்த பேச்சுவார்த்தையும் இல்லை என்றும், நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் என் அத்தை, என் தந்தையும், என் தாயாரும் திருமணமான நாளில் இருந்து 30 வருடங்களாக பிரிந்து வாழ்வதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அவர்கள் சேர்ந்து தான் வாழ்ந்தார்கள். என் பெற்றோருக்கு விவாகரத்து ஆகிவிட்டது என்றால் சரியல்ல, விவாகரத்து ஆகவில்லை. அதனால் தான் என் தந்தையும் நாங்களும் பிரிந்து வாழ்ந்து வந்தோம் என்றால் சரியல்ல, சேர்ந்து வாழ்ந்தோம். இறந்த செல்வமணி

தகவலை அவரது சகோதரியான அமுதாவிற்கு தான் முதலில் தகவல் சொல்லப்பட்டது என்றால் அருகில் இருந்ததால் தகவல் சொன்னார்கள். விபத்து சேலத்தில் நடந்தது என்றால் சரிதான். அமுதா திருச்சியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கோ, என் தாயாருக்கோ, என் அப்பா விபத்துக்குள்ளானது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் முதலில் தெரிவிக்கப்படவில்லை. இறந்த செல்வமணி என் தாயாருடன் வசிக்கவில்லை என்றும், அவர்கள் பிரிந்து வாழ்ந்து வந்தார்கள் என்றும், அதனால் தான் அவர்கள் விபத்துக்குள்ளான தகவல் கூட எங்களுக்கு முதலில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் அமுதாவிற்கு முதலில் தகவல் கொடுக்கப்பட்டது என்றால் அவர்கள் அருகில் இருந்ததால் கொடுத்தார்கள். விபத்து நடந்தவுடன் 10வது நிமிடம் எங்களுக்கு தகவல் வந்துவிட்டது. என் அத்தையும் என்னிடம் கூறிவிட்டார். விபத்து நடந்தவுடன் சம்பவ இடத்திற்கு நான் சென்றேனா என்றால் எனக்கு குழந்தைபிறந்திருந்திருந்ததால் என் கணவர் வேலாயுதம் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தார். கீழையூரில் தான் என் தந்தையை அடக்கம் செய்தார்கள். நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் சம்பவ இடத்திற்கு நேரடியாக சென்று பார்த்தார் என்று வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த செல்வமணியின் உடலை நாங்கள் வாங்க மறுத்துவிட்டோம் என்றால் சரியல்ல, நான் தான் அவருக்கு இறுதி சடங்கு எல்லாம் செய்தேன். என் தந்தைக்கோ, என் அம்மாவிற்கோ, தொடர்பு எதுவும் இருந்ததில்லை என்றும், என் தந்தையை சார்ந்து நான் வாழவில்லை என்றால் சரியல்ல. குற்றவழக்கை பற்றிய விபரம் எனக்கு எதுவும் தெரியாது. குற்றவழக்கில் நான் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் இதுவரை விசாரிக்கப்படவில்லை. உண்மையில் இறந்த செல்வமணிக்கும், எங்களுக்கும்

நேரடியாக தொடர்பு இருந்திருந்தால் என்னையும் , என் தாயாரையும்சாட்சியாக விசாரித்திருப்பார்கள் என்றும், தொடர்பு இல்லாததால் தான் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. ஜீலை 23, 2016அன்று விபத்து நடந்தது. என் தந்தை 2018ம் ஆண்டு தான் இறந்தார் என்றும் நான் 2016 என்று வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றும், தொடர்பு இருந்திருந்தால் நான் வருடத்தை சரியாக சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து வழக்கானது 6 வருடம் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டதற்கான காரணம் என்னவென்றால் திருச்சியில் என் அத்தை இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனுவானது தள்ளுபடி செய்யப்பபட்டுவிட்டது, அதனால் காலதாமதம் ஆகிவிட்டது. என் தந்தை இறந்த 2 ஆண்டுகள் கழித்து தான் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.4 வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.5 வாரிசு சான்றிதழ் ஆனது, என் தந்தை இறந்த 3 ஆண்டுகள் கழித்து தான் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.4, ம.சா.ஆ.5 ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. என் தகப்பனாருடைய உடற்கூராய்வு அறிக்கையை வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உடற்கூராய்வு அறிக்கையை தாக்கல் செய்தால் என் தந்தையின் உண்மையான வயது 85 என்பது தெரிந்துவிடும் என்பதால் அதை வேண்டுமென்றே மறைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 என் தாயார் சாவித்திரி அவர்களுடைய ஆதார் அட்டை ஆகும். அதில் அவருடைய பிறந்த வருடம் 1964ம் ஆண்டு பிறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. என் தாயாருக்கு தற்போது 60 வயது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த மனுவில் என் தந்தையின் வயது 60 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் தந்தையின் வயது 60 என்பரை நிருபிக்க வேறு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

என் தந்தை செல்வமணி ஏற்காடில் இருந்து கள்ளக்குறிச்சி செல்லும் சாலையை கடக்கும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் விபத்தை பார்க்கவில்லைஎன்பதால் அவர் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி சென்றார் என்பது எனக்கு தெரியாது. என் தந்தை வயோதிகம் அடிப்படையில் சாலையை கவனிக்காமல் கடந்ததால் தான் விபத்து நேரிட்டது என்றால் சரியல்ல. என் தந்தையின் இறப்பிற்கு காரணம் அவருடைய கவனக்குறைவு என்றால் சரியல்ல. விபத்து செல்வமணியின் கவனக்குறைவு காரணமாக நடந்தது என்பதால் 2ம் எதிமனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. அதிகமான இழப்பீடு கோரியுள்ளோம் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் தந்தை ஆட்டோ ஓட்டி தொழில் செய்து கொண்டிருந்தார். என் தந்தை ஆட்டோ ஓட்டி தொழில் செய்து கொண்டிருந்தார் என்பதை நிருபிக்க ஆவணம் எதுவ் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. என் தந்தை ஆட்டோ ஓட்டி மாதம் 30,000 ரூபாய் என்பதை நிருபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் தந்தைக்கு வயது இறக்கும் போது 85 வயது இருக்கும் என்றும் அவரால் ஆட்டோ ஓட்ட முடியாது என்றால் சரியல்ல, ஆட்டோ ஓட்டி 30,000 ரூபாய் மாதம் சம்பாதித்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தையுடைய ஆதார் அட்டையோ, ஓட்டுநர் உரிமமோ இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். செல்வமணிக்கும் எங்களது குடும்பத்திற்கும் இடையே 30 வருடமாக தொடர்பில்லை என்பதால் தான் ஆதார் அட்டையோ, ஓட்டுநர் உரிமமோ இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்னுடைய தந்தை கணக்குபிள்ளையாக வேலை பார்த்தாக குறிப்பிட்டுள்ளேன் என்றும், அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 6 மாத காலதாமதமாக இந்த வழக்கு

தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2024.12.05 23:48:20 +0530

Sub Judge
Melur